தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

18.12.2012 P.M

19.12.2012 A.M

## காற்றழுத்த தாழ்வு நிலை: 4 மாவட்டங்களில் மட்டும் மழைக்கு வாய்ப்பு

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கை கடற்பகுதியில் நிலை கொண்டுள்ளதால் தென் தமிழகத்தின் 4 மாவட்டங்களில் லேசான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் கடந்த சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இது இப்போது இலங்கை கடற்பகுதியில் நிலை கொண்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கை கடற்பகுதியில் நீடிக்கிறது. இதனால் இலங்கையில் மழை பெய்து வருகிறது.

தென் கடலோர மாவட்டங்களான கன்னியாகுமரி, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்களில் மட்டும் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பாளையங்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் மட்டும் லேசான மழை பெய்துள்ளது என்றனர்.

வானிலை முன்னறிவிப்பு: தென் கடலோர தமிழகத்தில் புதன்கிழமை லேசான மழை பெய்யும். மற்ற பகுதிகளில் வறண்ட வானிலையே காணப்படும்.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில நேரங்களில் பலத்த தரைக்காற்று வீசும்.

## சிவகங்கை மாவட்டத்தில் கருகும் பயிர்கள்வி.கருப்பையா

சிவகங்கை மாவட்டத்தில் கருகி வரும் நெற் பயிர்களைக் காப்பாற்ற முடியாமல் அவற்றை மாடுகள் மேயும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. தங்களது பயிர்களுக்கு இன்சூரன்ஸ் தொகையாவது கிடைக்குமா? என்கிற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

மாவட்டத்தில் இந்தாண்டு 93 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. 5 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பெரும்பாலும் வைகையாற்றுத் தண்ணீர், மழையை நம்பியே விவசாயம் நடைபெறுகிறது.

இந் நிலையில், இந்தாண்டு அவ்வப்போது பெய்த மழையைப் பயன்படுத்தியும், மோட்டார் தண்ணீரைக் கொண்டும் விவசாயிகள் நெற் பயிர் நாற்றங்கால் அமைத்தனர். சில இடங்களில் விதைப்பு முறையில் நெல் நடவு நடைபெற்றது.

வைகையாற்றுப் பாசனம் மூலம் மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி ஆகிய தாலுகா பகுதிகளில் 20 ஆயிரம் ஹெக்டரில் நெல்லும், 2 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பும் நடவு செய்யப்பட்டுள்ளது.

வைகையாற்றில் தண்ணீர் வந்து விடும், மழை பெய்துவிடும் என நம்பியிருந்த விவசாயிகளை இந்தாண்டு இயற்கை ஏமாற்றிவிட்டது.

மாவட்டத்தின் பல இடங்களில் நாற்றங்காலில் வளர்ந்திருந்த நாற்றுக்களைப் பிடுங்கி நடக்கூட தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் இந்த நாற்றுகளை அப்படியே விட்டுவிட்டனர்.

தற்போது மழை பெய்யாததால் நெற்பயிர்கள் கருகத் தொடங்கியுள்ளன. மாவட்டத்தில் கருகி வரும் பயிர்களைக் காப்பாற்ற வழியில்லாததால் பயிர்களை மாடுகள் மேயும் பரிதாப நிலை உள்ளது.

மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் தண்ணீரின்றி விவசாயம் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டாததால் பல விளைநிலங்கள் தரிசாகவே காணப்படுகிறது.

இந் நிலையில் கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுப் பணத்தையாவது வாங்கி செலவை ஈடு செய்யலாம் எனக் கருதி மாவட்டம் முழுவதும் தங்களது பயிர்களை காப்பீடு செய்ய மும்முரம் காட்டி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மானாமதுரை ஒன்றியம் மேலப்பசலை கிராமத்தைச் சேர்ந்த அய்யனார் கூறியதாவது:

கடன் வாங்கி நெல் நாற்று நடவு செய்தேன், வைகையாற்றில் தண்ணீர் வராததாலும், மழை இல்லாததாலும் நாற்றைக் காப்பாற்ற முடியவில்லை. இதனால் நாற்றுகளை பிடுங்கி நடுவதற்குள் கருகிவிட்டது. மாடுகள் தான் இவற்றை மேய்ந்து வருகின்றன. எனவே அரசு இம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணப் பணிகளை தொடங்க வேண்டும் என்றார்.

சின்னக்கண்ணனூரைச் சேர்ந்த விவசாயி முத்துராமலிங்கம் கூறுகையில், எனது வயலில் நெல் நாற்று பயிரிட்டிருந்தேன், மழை இல்லாததால் பயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை. லாரியில் தண்ணீர் கொண்டு வந்து வயலுக்குப் பாய்ச்சுவதற்கு ஆகும் செலவுக்கு அரிசி வாங்கி சமையல் செய்யலாம், இந்தாண்டு மழை இல்லாததால் விவசாயம் கை கொடுக்கவில்லை என்றார்.

வேளாண் அதிகாரிகள் கூறுகையில், சிவகங்கை மாவட்டத்தில் மழை இல்லாதாதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது எனத் தெரியாமல் தவிக்கின்றனர். இதனால் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு ஏக்கர் விவசாய நிலத்துக்கு நெல் நாற்றுக்கு ரூ.276 காப்பீட்டுத் தொகையாக பெறப்படுகிறது. அரசு இந்த மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்தால் மேம்படுத்தப்பட்ட தேசியப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.5107 கிடைக்க வாய்ப்புள்ளது என்றனர்.

விவசாயம் கைவிட்ட நிலையில் விவசாயிகள் காப்பீட்டு திட்டத்தில் இழப்பீடு தொகை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## தோட்டக்கலை நுண்நீர்ப் பாசனத் திட்டம் மூலம் 500 ஏக்கரில் மாதிரி கிராமம்

சிவகங்கை மாவட்ட தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் நுண்நீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் 500 ஏக்கரில் மாதிரி கிராமம் அமைக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.இருளப்பன் வெளியிட்டுள்ள அறிக்கை:

சிவகங்கை மாவட்டத்தில் நுண்நீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் மாதிரி கிராமம் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி காளையார்கோவில் வட்டாரத்தில் கௌரிப்பட்டி வருவாய் கிராமம்

தேர்வு செய்யப்பட்டு பயிர் சாகுபடி பரப்பு முழுவதையும் நுண்நீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் சாகுபடி பரப்பில் மா, கத்திரி, வெண்டை, கரும்பு பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனக் கருவிகள் அமைக்க திட்டமிடப்பட்டு இதுவரை 205 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிருக்கு நிலத்திற்கு கீழே குழாய்கள் மற்றும் சொட்டு நீர் நுண்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயிருக்கு இடவேண்டிய உரங்கள் அனைத்தும் சொட்டுநீர் பாசனம் மூலம் வழங்க உர டேங்களும் அமைக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர்ப் பாசன கருவிகள் அமைக்கப்படுகின்றன.

கௌரிப்பட்டி கிராமத்தில் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டுள்ளார்.

அவரது அறிவுரைப்படி இப்பகுதியில் வங்கிக் கடன் மூலம் ஆழ்துளை கிணறு, குழாய் கிணறு அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகளின் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பரப்பினை அதிகரித்து நுண்நீர்ப்பாசனம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக துணை இயக்குநர் எஸ்.இருளப்பன் தெரிவித்துள்ளார்.

### டிச.21 ராமநாதபுரத்தில் விவசாயிகள் குறை தீர் கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிச.21-ம் தேதி காலை 11.30 மணிக்கு ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான பொருள்கள் குறித்து விவாதிக்கலாம் என ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்: 33-வது பட்டமளிப்பு விழா, ஆளுநர் ரோசய்யா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்: 33-வது பட்டமளிப்பு விழா, ஆளுநர் ரோசய்யா, அமைச்சர் செ.தாமோதரன் பங்கேற்பு, பல்கலைக்கழக வளாகம், காலை 11.

ரத்தினம் தொழில்நுட்பக் கல்லூரி: தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் துவக்க விழா, ஆளுநர் ரோசய்யா பங்கேற்பு, கல்லூரி வளாகம், ஈச்சனாரி, காலை 10.15.

ரெப்கோ வங்கி: கடன் உதவி முகாம், செஞ்சிலுவைச் சங்க கட்டடம், ஹூசூர் சாலை, காலை 10.

ஜான்சன்ஸ் தொழில்நுட்பக் கல்லூரி: நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்த விழிப்புணர்வு முகாம், கருமத்தம்பட்டி, காலை 10.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்: மாநில அளவிலான மலர் சாகுபடியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கருத்தரங்கம், துணைவேந்தர் ராமசாமி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் சந்தோஷ் பாபு பங்கேற்பு, பல்கலைக்கழக வளாகம், மாலை 3.

கோவை கலைமகள் கலை அறிவியல் கல்லூரி: பொருளாதாரத்தில் பின்னடைந்த மாணவர்களுக்கு பயிற்சி, கல்லூரி வளாகம், காலை 9.

கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம்: ஓவியக் கண்காட்சி துவக்க விழா, கஸ்தூரி சீனிவாசன் கலை மையம், அவிநாசி சாலை, காலை 10.

கோவை அரிமா சங்கம்: இலவச அக்குபிரஷர் முகாம், அரிமா சமுதாயக் கூடம், சிவானந்தா காலனி, காலை 10.

கோயமுத்தூர் உற்பத்திக் குழு: உற்பத்தி குறித்த கருத்தரங்கம், ரேஸ்கோர்ஸ், காலை 9.30.

பிஷப் அப்பாசாமி கலை அறிவியல் கல்லூரி: கிறிஸ்துமஸ் விழா, ரேஸ்கோர்ஸ் தேவாலயம், மாலை 5.30.

பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி: மாநில அளவிலான பேட்மிண்டன், டேபிள் டென்னிஸ், பால் பேட்மிண்டன் போட்டி துவக்க விழா, மாவட்ட விளையாட்டு அதிகாரி ஸ்டான்லி பி.மேத்யூ பங்கேற்பு, கல்லூரி வளாகம், காலை 10.

ஆன்மிகம்

பேரூர் பட்டீசுவரசுவாமி கோவில்: மார்கழி திருவாதிரை உற்சவ விழா, காப்புக் கட்டுதல், காலை 9.

## 50 சத மானியத்தில் கறவை மாடுகளுக்கு காப்பீடு

தருமபுரி மாவட்ட விவசாயிகள் தங்களது கறவை மாடுகளுக்கு அரசு மானிய உதவியுடன் காப்பீடு செய்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் வளர்க்கும் கலப்பின பசுக்கள், எருமைகளுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு இழப்பு ஏற்படும்போது ஈடு செய்யவும் காப்பீடு செய்ய வேண்டியது அவசியமானது. தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை மூலம் கால்நடை காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் நியூ இந்தியா இன்சூரன்ஸ், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், நேஷனல் இன்சூரன்ஸ் ஆகிய நிறுவனங்கள் மூலம் அரசு மானியத்துடன் கால்நடைகளை காப்பீடு செய்யலாம். அரசு 50 சத மானியம் வழங்குகிறது. மீதமுள்ள 50 சத தொகையை பயனாளிகள் செலுத்த வேண்டும்.

ஓர் ஆண்டு முதல் மூன்றாண்டு வரை கால்நடை வளர்ப்போர் செலுத்தும் பிரிமியத்துக்கு தகுந்தபடி காப்பீட்டுத் திட்டத்தை தேர்வு செய்து கொள்ளலாம்.

கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதுதொடர்பாக விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகங்கள், கால்நடை கிளை நிலையங்களைத் தொடர்பு கொள்ளலாம். பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அணுகியும் காப்பீடு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

18th dec 2012 P.M

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 40.73 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 40.73 அடியாக இருந்தது.
அணைக்கு வினாடிக்கு 1,153 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 11,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.
கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 6,001 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,219 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 506 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.
வெண்ணாற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## பயிர் விளைச்சல் போட்டி: விவசாயிகளுக்கு அழைப்பு

வேளாண் துறை சார்பில் அறிவித்துள்ள பயிர் விளைச்சல் போட்டியில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் பி. எம்பெருமாள் வெளியிட்ட செய்தி குறிப்பு:

தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தமிழ்நாடு அரசு சிறந்த சாகுபடி முறைகளை கடைபிடிக்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்தில் பயிர் விளைச்சல்போட்டி மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் நடத்தப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் மற்றும் இறவை நிலக்கடலை பயிரில் மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் முன்பதிவு செய்யலாம்.

மாவட்ட அளவிலான நெல் சாகுபடி போட்டி:

மாவட்ட அளவில் சம்பா நெல் சாகுபடியில் நிகழாண்டுக்கு பயிர்விளைச்சல் போட்டி நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்திருத்தல் வேண்டும். இப்போட்டியில் கலந்துகொள்ளும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையத்தில் தொடர்பு கொண்டு ரூ.50 -ஐ முன் பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.போட்டியில் கலந்துக்கொள்ளும் விவசாயிகள் குறைந்தது 50 சென்ட் பரப்பில் சாகுபடி செய்திருக்க வேண்டும். மாவட்ட அளவில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு முதல்பரிசு ரூ.15 ஆயிரம், 2- வது பரிசு ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும்.

மாநில அளவில் திருந்தியநெல் சாகுபடி போட்டி:

நிகழாண்டில் மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு ரூ.5 லட்சம் ரொக்கம் மற்றும் ரூ. 3500 மதிப்புள்ள பதக்கமும் குடியரசு தினவிழாவில் தமிழக முதல்வரால் வழங்கப்படும். இப்போட்டியில் கலந்துக்கொள்ளும் விவசாயிகள் கட்டணமாக ரூ.150 -செலுத்தி தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையத்தில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

சிறப்பு விருது:

தமிழகத்தில் மானாவாரி நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி உணவு உற்பத்தியை உயர்த்தும் நோக்கில் தமிழக அரசு மானாவாரி நெல், மானாவாரி, இறவை உளுந்து பாசிபயறு, துவரை மற்றும் சோளம் ஆகிய பயிர்வகை சாகுபடியில் மாநில அளவில் அதிகமாக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு முதல் பாpசாக ரூ.50 ஆயிரம், 2 -வது பரிசு ரூ.25 ஆயிரம், 3-வது பரிசு ரூ.10 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்கு கொள்ளும் விவசாயிகள் முன்பதிவு கட்டணமாக ரூ.150 - தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தில் செலுத்தி போட்டியில் முன் பதிவு செய்யலாம்.

இப்போட்டியில் விருதுக்கு தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு வரும் ஆண்டில் விருதுகள் வழங்கப்படும்.
இவ்விருது போட்டியில் கலந்துகொள்ளும் விவசாயிகள் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொள்ள இயலாது எனவும், போட்டி குறித்து விதிமுறைகளை தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

## நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு 100 சத மானியத்தில் தெளிப்புநீர்ப் பாசனக் கருவிகள் விநியோகம்

நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு 100 சத மானியத்தின்கீழ் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கும் முகாம் உதகையில் நடத்தப்பட்டது.
உதகையில் திங்கள்கிழமை நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மேலாண்மைக்குழு உறுப்பினர் கே.ஆர்.அர்ஜுணன், உதகை ஊராட்சி தலைவர் சாந்தா, கேத்தி பேரூராட்சி தலைவர் மகேஸ்வரி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மோகன், துணை இயக்குநர் மணி, குன்னூர் பகுதிக்கான உதவி இயக்குநர் சிப்லா மேரி ஆகியோர் உபகரணங்களை வழங்கினர்.
இந்நிகழ்ச்சியில் சுமார் 23 ஹெக்டேர் பரப்பளவிற்கான பகுதிக்கு 23 விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்ப்பாச்னக் கருவிகள் வழங்கப்பட்டன. இதில் ஜெகதளா, கேத்தி பாலடா, தாம்பட்டி, அதிகரட்டி மற்றும் தூதூர்மட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.22, சென்னையில் ரூ.3.15.

கறிக்கோழி

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.60, முட்டைக்கோழி கிலோ ரூ.40.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

19.12.2012 A.M

## வாசுதேவநல்லூரில் தமிழ்நாடு நீர், நிலவளத் திட்டப்பயிற்சி

சிவகிரி:வாசுதேவநல்லூர் காமராஜர் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் கலிங்கலாறு உப வடிநிலப்பகுதி வேளாண் கூலித் தொழிலாளர்களுக்கான, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப ஒரு நாள் பயிற்சி நடந்தது.பயிற்சிக்கு வாசு., டவுன் பஞ்., தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்தார். வாசுதேவநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெள்ளைப்பாண்டி முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் வெள்ளைப்பாண்டி வரவேற்று, திருந்திய நெல் சாகுபடி முறை, சிக்கன நீர்ப்பாசன மற்றும் திருந்திய நெல் சாகுபடியில் வேளாண் கூலித் தொழிலாளர்களின் பங்கு குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்.தோட்டக்கலை உதவி இயக்குநர் முகைதீன் எழுமிச்சை சாகுபடியில் அதிக மகசூல் எடுப்பதற்கான உத்திகள், காய்கறி சாகுபடியில் வீரிய ஒட்டு ரகங்களின் பங்கு மற்றும் மானியத்திட்ட விவரங்கள் குறித்து விளக்கி கூறினார். வேளாண்மை பொறியியல் துறை இளநிலை உதவியாளர் ராஜமுருகேஸ்வரன் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் வேளாண்மை சாகுபடிக்கு உகந்த நவீன வேளாண் கருவிகளின் பயன்பாடு குறித்து எடுத்துக் கூறினார்.

சிவகிரி வேளாண்மைத் துணை அலுவலர் சுப்பிரமணியன், மண்மாதிரி எடுப்பதின் அவசியம் மண்மாதிரி எடுக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கிக் கூறினார்.வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை உதவி வேளாண்மை அலுவலர் கங்காதரன் பயிற்சியில் கலந்து கொண்டு வேளாண் விற்பனைத்துறையின் மூலம் வழங்கப்படும் மானியத்திட்ட விவரங்கள் மற்றும் செயல்பாடு குறித்து விளக்கி கூறினார். பயிற்சியில் பயிர் பாதுகாப்பில் நன்மை செய்யும் பூச்சிகளின் பங்கு, திருந்திய நெல் சாகுபடி குறித்தான விளக்க சார்ட்டுகளுடன் கூடிய கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது.மேலும் வயல்வெளிப்பயிற்சியாக மண்மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி, திருந்திய நெல்சாகுபடியில் நெல் நடவுக் குறியீட்டுக்களை பயன்படுத்தி நெல் நடவு செய்தல், களைக்கருவி கொண்டு களையெடுத்தல் செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சியின் போது வாசுதேவநல்லூர் கிராமம் திருந்திய நெல் சாகுபடி குழுவிற்கு விசைக்களைக்கருவி ஒன்று ரூபாய் 27,400 மானியத்தில் வழங்கப்பட்டது. பயிற்சியின் முடிவில்

பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண்மை கூலித் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஊக்கத்தொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி அலுவலர் மாரியப்பன் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் கருப்பையா, பரமசிவன் மற்றும் அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் செய்திருந்தனர்.

## டிச.,21ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தஞ்சாவூர்: விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும், 21ம் தேதி நடக்கிறது என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தஞ்சையில் கலெக்டர் அலுவலகத்தில் மாதம்தோறும் விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் நடத்தப்படும். நடப்பு டிசம்பர் மாதத்துக்கான கூட்டம் வரும், 21ம் தேதி காலை, 10 மணிக்கு, தஞ்சை கலெக்டர் அலுவலக பிரதான கட்டிட கூட்ட அறை முதல் மாடியில் நடக்கிறது. இதில் விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து அதிகாரிகள் விளக்கம் அளிக்கின்றனர். கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் அனைவரும், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை, நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் சார்ந்த கருத்துக்களை மட்டுமே தெரிவிக்குமாறு, கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கருத்துகளை கூற விரும்பும் விவசாயிகள், தங்கள் பெயர், ஊர் மற்றும் வட்டாரம் குறித்த விபரத்தை கூட்டம் நடக்கும் தினத்தில் காலை, 8.30 மணி முதல், 10 மணி வரை கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் பதிவு செய்துள்ள விவசாயிகளில், முதல் இரண்டு பேர் மட்டுமே கருத்துக்களை கூற அனுமதிக்கப்படுவர்.

## ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தில் மிளகாய் சாகுபடி தீவிரம்

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தில் நெல்லுக்கு அடுத்த படியாக மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.ஆர்.எஸ்.மங்கலம், சனவேலி, உப்பூர், சேத்திடல், சீனாங்குடி, செங்குடி, புல்லமடை உட்பட சுற்றுப்புற பகுதிகளில் 3,200 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டள்ளது. அக்டோபர் முதல் வாரத்தில் விதைப்பு செய்யப்பட்டது. அதிகம் தண்ணீர் இன்றி வறட்சியை தாங்கும் தோட்டக்கலை பயிர் என்பதால், தற்போதைய சீதோஷ்ணத்திற்கு ஏற்றதாக உள்ளது.இதனால் விவசாயிகள், களை எடுக்கும் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். மழை இன்றி நெல் பயிர்கள் கருகியுள்ள நிலையில் மிளகாய் செடிகள் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் ஏக்கருக்கு 8,000 ரூபாய் வரை செலவு செய்துள்ளனர்.

## மழையின்றி கருகிய 28 ஆயிரம் எக்டேர் நெற்பயிர்:ரூ.105 கோடி இழப்பு

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டு பெய்ய வேண்டிய மழை ஏமாற்றியதால், 28 ஆயிரம் எக்டேர் நெற்பயிர் தண்ணீர் இன்றி கருகியுள்ளது. 105 கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.ராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர், திருவாடனை, ஆர்.எஸ்., மங்கலம் உட்பட மாவட்டத்தில் பல பகுதிகளில் நடப்பாண்டு 1.28 லட்சம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. போதிய மழையின்றி கண்மாய்கள் வறண்டு வருகின்றன. தண்ணீர் இன்றி நெற்பயிர் கருகி வருகிறது. பயிரை எப்படி காப்பாற்றப்போகிறோம் என தெரியாமல், விவசாயிகள் திணறி வருகின்றனர். லாரி தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சி, மகசூலை எட்டியுள்ள பயிரை காப்பாற்றும் முயற்சியும் சில பகுதிகளில் நடந்து வருகிறது. விவசாயிகளின் பரிதாப நிலையை உணர்ந்த வேளாண் அதிகாரிகள், மாவட்டத்தில் டிச.,12ம் தேதி வரை நடத்திய கணக்கெடுப்பில், 28 ஆயிரம் எக்டேர் நெற்பயிர் கருகிப்போனது தெரியவந்தது. இதேநிலை நீடித்தால், ஒரு லட்சத்து 28 ஆயிரம் எக்டேர் நெற்பயிர்கள் முழுவதும் சாவியாகிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.ராமநாதபுரம் பெரியகண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர், பாலசுந்தரமூர்த்தி கூறியதாவது: 10 நாட்களுக்கு தேவையான தண்ணீர் மட்டுமே கண்மாய்களில் உள்ளது. இது விவசாயத்திற்கு போதாது. வைகை தண்ணீரும் வரவில்லை. மழை பெய்ததால் தான் மகசூல் நிலையில் உள்ள பயிர்களை காப்பாற்ற முடியும், என்றார்.ராமநாதபுரம் வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்தாண்டு நவம்பரில் 206 மி.மீ., மழைக்கு, 304 மி.மீ., பெய்தது. நடப்பாண்டு நவம்பரில், 56 மி.மீ., மட்டுமே பெய்தது. டிசம்பரில் பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை. பெரும்பாலான விவசாயிகள் அக்டோபரில் பெய்த மழையை நம்பி மானாவாரி சாகுபடியில் ஈடுபட்டனர். ஒரு எக்டேருக்கு 5,119 கிலோ நெல் மகசூல் கிடைக்கும். ஒரு குவிண்டால் 1,350 ரூபாய் வரை விலைபோகும். மழை பொய்த்து 28 ஆயிரம் எக்டேர் நெற்பயிர்கள் கருகியதால், விவசாயிகளுக்கு 105 கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 2011ல், இம்மாவட்டத்தில் 6 லட்சத்து 72 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் நடப்பாண்டு, கால்வாசி கூட தேறுமா என்பது சந்தேகமே, " என்றார்.
விவசாயிகளே மஞ்சள் விலை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்வதாக ஜனாதிபதி நம்பிக்கை
ஈரோடு: "விவசாயிகளே, மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்யத் தேவையான உதவிகளை, மத்திய, மாநில அரசுகள் செய்ய பரிந்துரைக்கப்படும்' என்று ஜனாதிபதி உறுதியளித்ததாக, விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி தெரிவித்துள்ளார்.

கடந்த, 13ம் தேதி, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில், எம்.பி., கணேசமூர்த்தி தலைமையில், டில்லியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை நேரில் சந்தித்து, விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனுவில், ஆந்திரா, தமிழகம், மகராஷ்டிரா, கர்நாடகா, ஒடிசா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய பகுதியில், 80 சதவீதம் மஞ்சள் சாகுபடியில், 30 முதல், 40 மெட்ரிக் டன் உற்பத்தியாகிறது. ஆந்திராவில், 41 சதவீதம், தமிழகத்தில், 21 சதவீதம், இதர பகுதிகளான கர்நாடகா,

மகராஷ்டிராவில், ஏழு சதவீதம் மஞ்சள் உற்பத்தியாகிறது. மேலும், ஆந்திரா - நிஜமதாபாத், தமிழகம் - ஈரோடு, மகராஷ்டிரா - சங்லி ஆகிய மூன்று பெரிய மஞ்சள் மார்க்கெட் உள்ளது. கடந்த, 2010 டிசம்பரில், மஞ்சள் குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. 2012, ஜனவரியில் குவிண்டால், 2,500 ரூபாயாக குறைந்துள்ளது. ஒரு ஏக்கர் மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து, 73 ஆயிரத்து, 605 ரூபாய் செலவாகிறது. இதில், 20 குவிண்டால் வரை உற்பத்தி செய்யாகிறது. அதன்படி, குவிண்டாலுக்கு, 8,700 ரூபாய் உற்பத்தி செலவாகிறது. மத்திய அரசு, 4,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறது. அதேபோல், கர்நாடகாவில், 5,000 ரூபாய்க்கு கொள்முதலாகிறது. தமிழக அரசும், மத்திய அரசு அறிவித்த விலைக்கு கொள்முதல் செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தியாவில் விளைபொருட்களில் மிளகாய் அதிக அந்நிய செலவாணியை ஈட்டி தருகிறது. அடுத்தப்படியாக மஞ்சள் உள்ளது. ஆனால், விவசாயிகள் மஞ்சள் இருப்பு வைக்க இடவசதி, பொருளாதார வசதி இன்றி, விற்கும் நிலையில் உள்ளனர்.

வங்கியில் குறைந்த வட்டியில் வியாபாரிகளுக்கு கடன் வழங்குகின்றனர். விவசாயிகளுக்கு வழங்குவதில்லை. விவசாயிகளுக்கு, ஒரு குவிண்டால், 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நபார்டு வங்கி மூலம் வழங்க வேண்டும். மஞ்சள் உற்பத்தி மற்றும் விற்பனை சந்தை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு மஞ்சள் ஏற்றுமதி செய்வதை தடுக்க வேண்டும். விவசாயிகள் நலன் கருதி, மஞ்சள் விலையை விவசாயிகளே விலை நிர்ணயம் செய்ய, உதவ வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து இந்திய விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது:

"டில்லியில், எம்.பி., கணேசமூர்த்தி தலைமையில், தெலுங்கு தேச கட்சி எம்.பி., நமோ நாகேஸ்வரராவ், வேணுகோபால் ரெட்டி மற்றும் மார்க்சிஸ்ட் கம்னியூஸ்ட் எம்.பி., நடராஜன், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் காசியண்ணன், ஆந்தர மாநில பொறுப்பாளர் நரசிம்மம்நாயுடு, தேசிய செயலாளர் ராமகவுண்டர் ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தோம்.

மத்திய அரசிடம், மஞ்சள் விவசாயிகளின் கோரிக்கைகளை பரிந்துரைப்பதாகவும், விவசாயிகள் விலை நிர்ணயம் செய்வதை வரவேற்று, அதற்கு தேவையான உதவிகளை மத்திய, மாநில அரசுகள் செய்ய பரிந்துரை செய்வதாக, ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வாழை வயலில் ஊடுபயிராக "பூசணி' இரட்டிப்பு வருமானத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி

சத்தியமங்கலம்:சத்தியமங்கலம் பகுதியில் வாழை வயலில் நடப்பட்டுள்ள பூசணி, தற்போது அறுவடையாகி வருகிறது. இரட்டிப்பு வருமானத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள், பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் வாழை பயிரிட்டுள்ளனர். இதில் செவ்வாழை மற்றும் கதளி ஆகிய ரக வாழைகளுக்கு முக்கியதுவம் கொடுக்கப்படுகிறது. இந்த ரகவாழைகள் ஏக்கர் ஒன்றுக்கு செவ்வாழை, 800 வாழை கன்றுகளும், கதளி ஏக்கர் ஒன்றுக்கு, 1,200 வாழை கன்றுகளும் நடப்படுகிறது.

ஒவ்வொரு வாழை கன்றுகளுக்கு இடையே செவ்வாழை எட்டு அடி இடைவெளியும், கதளி ரகத்திற்கு ஆறு அடி இடைவெளியும் விடப்படுகிறது. இந்த இடைவெளியில் புற்கள் முளைத்து விடுகிறது. இந்த புற்களை அகற்றவே வாழை விவசாயிகள் அதிகமாக செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்த இடைவெளியில் புற்கள் முளைக்கப்படுவதை தடுக்க களைக்கொள்ளி மருந்தும் தெளிக்கின்றனர்.

ஆனால் தற்போது விவசாயிகள் இந்த இடைவெளியில் ஊடுபயிர் நடவு செய்து, இதில் கூடுதலாக மற்றொரு வருமானத்தை பெருக்கி வருகின்றனர். இதில் தற்போது நல்ல வருமானம் தரும் ஊடுபயிர் பூசணி ஆகும். வாழை கன்று நடவு செய்யப்பட்ட பின் பத்து மாதங்கள் கழித்து பலன் கொடுக்கிறது.

இதற்குள் இயற்கை சீற்றமாக சூறாவளி காற்று வந்தால் வாழை விவசாயிகள் கதி மோசமாகிவிடும் என்பது குறிப்பிடதக்கது. ஆனால் இதன் இடைவெளியில் பயிரிடப்படும் பூசணி பயிர் நடவு செய்யப்பட்ட நாளில் இருந்து, 80 வது நாளில் இருந்து பலன் கொடுக்கிறது. தற்போது சத்தியமங்கலம் பகுதியில் வாழை வயலில் ஊடுபயிராக நடவு செய்யப்பட்ட பூசணி அறுவடையாகி வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு, 20 டன் முதல், 30 டன் வரை ஊடுபயிரான பூசணி விளைச்சல் கொடுக்கிறது. தற்போது ஒரு கிலோ பூசணி, ஐந்து ரூபாய்க்கு விற்பனையாகிறது. பூசணி செடி படர்ந்து வளர்வதால் வாழை வயலில் புற்கள் முளைப்பதில்லை.

ஊடுபயிரான பூசணி காய் பிடித்த காலத்தில் இருந்து மூன்று மாதங்கள் வரை பலன்கொடுக்கிறது. மண் வளம் குறைவாக இருந்தால், பலன் கொடுப்பது இரண்டு மாதங்களாக குறையும். இது குறித்து வாழை விவசாயிகள் கூறும்போது, ""ஊடுபயிராக பூசணி பயிரிடுவதால் பெரும்பலான வாழையின் பராமரிப்பு செலவு குறைகிறது.

பூசணி விலை அதிகரித்தால் வாழைக்கு மேல் விவசாயிகளுக்கு பூசணியில் லாபம் கிடைக்கும்,'' என்றனர்.

## வனப்பகுதியில் சுண்டைக்காய் விளைச்சல் அதிகம்

கோபிசெட்டிபாளையம்:கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள வனப்பகுதியை ஒட்டிய கிராம மக்கள், சுண்டைக்காய்களை விற்பனைக்காக தயார்படுத்தி வருகின்றனர்.

சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் சத்தியமங்கலம், கடம்பூர், பவானிசாகர், தாளவாடி, ஆசனூர்,

பங்களாபுதூர் ஆகிய வனப்பகுதிகள் உள்ளன.
நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால் வனப்பகுதியில் உள்ள மரம், செடி, கொடியில் உள்ள இலைகள் அனைத்தும் காய்ந்து கீழே உதிர்ந்த விட்டன. வனப்பகுதியில் உள்ள குளம், குட்டைகளில் தண்ணீர் வற்றியுள்ளது.
விளாங்கோம்பை, வினோபா நகரை சேர்ந்த பொது மக்கள் குண்டேரிப்பள்ளம் வனத்தையொட்டி சமவெளிப்பகுதியில் ஆடு, மாடு மேய்த்து வருகின்றனர். சமவெளிப்பகுதியில் கிளாக்காய், சுண்டைக்காய் செடி அதிகளவில் காணப்படுகிறது. சுண்டைக்காய் செடிகளில் அதிகளவில் கொத்து கொத்தாக சுண்டைக்காய் காய்த்துள்ளது.
ஆடு, மாடு மேய்க்க செல்வோர் சுண்டைக்காய் பறித்து வருகின்றனர். தாங்கள் பறிந்து வந்த சுண்டைக்காய் வீடுகளுக்கு முன் காய வைத்து, வற்றலாக்கி வருகின்றனர்.
பொது மக்கள் கூறுகையில், ""சுண்டைக்காய் கசப்பு தன்மை அதிகளவில் உள்ளது. சுண்டைக்காய் வற்றாலை குழம்பு மற்றும் வருவலுக்கு பயன்படுத்தலாம். சுண்டைக்காய் சாப்பிடுவதன் மூலம் குடலில் உள்ள புழுக்கள் இறந்து விடும்.
சர்க்கரை நோய் போன்றவைகளை கட்டுப்படுத்தும். உடலுக்கு தேவையான எதிர்ப்பு சக்தியும் கிடைக்கிறது.
எங்களுடைய வீட்டுக்கு தேவையானதை வைத்துக் கொண்டு மீதத்தை விற்று விடுவோம்,'' என்றனர்.

## தேயிலை ஏலத்தில்விலை ஏற்றம்

குன்னூர்:குன்னூர் தேயிலை ஏலத்தில் தேயிலை தூளுக்கு 2 ரூபாய் ஏற்றம் இருந்தது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 50வது ஏலம் நடந்தது. இதில், மொத்தம் 14.21 லட்சம் கிலோ தூள் விற்பனைக்கு வந்தது.இலை ரகம் 10.27 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.94 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டதால், தூள் விற்பனை களை கட்டியது. விற்பனைக்கு வந்த 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும், கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் விலை அதிகரித்தது. சாதாரண இலை ரகத்துக்கு 81-84 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 105-145 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 85-88 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 105-145 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக "சிடிசி' டஸ்ட் ரகத்தில், ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 163 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 226 ரூபாயும் விலை கிடைத்தது.வரும் 20 மற்றும் 21ம் தேதிகளில் நடக்கும் 51வது ஏலத்தில் 14.99 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், இலை ரகம் 10.73 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.26 லட்சம் கிலோவும் அடங்கும்.

## வடகிழக்கு பருவமழை ஏமாற்றியதால் தரிசாக மாறிவரும் விளை நிலங்கள்

சேலம்: சேலம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தவறி விட்டதால், பல புதிய பயிர்கள் செய்திட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வறட்சியால், விளை நிலங்கள் தரிசாக மாறிக் கொண்டிருக்கின்றன.

தமிழகம் முழுவதும், இந்தாண்டு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதுதவிர, மின்சார பிரச்னையாலும் விவசாயிகள் பயிரிட முடியாமல் தவிக்கின்றனர். சேலம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்திருந்தாலும், வட கிழக்கு பருவமழை கை கொடுக்காததால், பல இடங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் வாடி வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கோடை மழை, 206.4 மி.மீ., பெய்ய வேண்டும். இந்தாண்டு, 116.5 மி.மீ., மழை மட்டுமே பதிவானது. ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தென் மேற்கு பருவமழை சீஸனில், 133.6 மி.மீ., மழை பெய்ய வேண்டும். சேலம் மாவட்டத்தில், 138.7 மி.மீ., மழை பதிவானது. சராசரியை விட சற்று கூடுதலாக மழை பெய்ததால், ஏரிகள், சிறு குளங்கள் ஓரளவு நிரம்பின.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் வட கிழக்கு பருவமழை சீஸனில், 376.6 மி.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், 269.4 மி.மீ., மழையே பெய்துள்ளது. சேலம் மாவட்டத்தில் ஆண்டு முழுவதும், 993.9 மி.மீ., சராசரி மழை பெய்ய வேண்டும். ஆனால், 2012 ஜனவரி முதல், தற்போது வரை, 798.3 மி.மீ., மழையே பெய்துள்ளது. 195.6 மி.மீ., மழை குறைவு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சேலம் மாவட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் அதிக மழை பெய்வதுண்டு. 2010ம் ஆண்டு நவம்பரில், 328.7 மி.மீ., மழை பெய்துள்ளது. 2011ம் ஆண்டு நவம்பரில், 227.2 மி.மீ., மழை பெய்துள்ளது. இந்தாண்டு, 2012 நவம்பரில், 63.2 மி.மீ., மழை மட்டுமே பதிவாகியுள்ளது. அருகில் உள்ள கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களை விட, சேலம் மாவட்டத்தில் ஓரளவு மழை பெய்துள்ளது. விவசாயிகள் குறைந்தளவு நீரை பயன்படுத்தி, விவசாயம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சேலம் மாவட்ட விவசாயிகள் கூறியதாவது:

வட கிழக்கு பருவமழை தவறி விட்டதால், புதிதாக பயிர்களை பயிரிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கொங்கு மண்டலத்தில், இறவை பாசனம் மூலம் பயிரிடப்படும் கடலை, எள், மக்காச்சோளம், சூரியகாந்தி, கரும்பு ஆகிய பயிர்கள் கூட பயிரிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மழை பெய்யாததாலும், மின்சாரம் பற்றாக்குறையால் விவசாயம் பாதித்துள்ளது. வறட்சியால், விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி வருகின்றன.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மஞ்சள் விலை உயரும் வாய்ப்பு சேலம் மாவட்டத்தில் சாகுபடி பரப்பு குறைவு

சேலம்: சேலம் மாவட்டத்தில், மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்ததால், விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

ஈரோட்டுக்கு அடுத்ததாக, சேலம் மாவட்டத்தில் மஞ்சள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம், ஆத்தூர், கெங்கவள்ளி, பெத்தநாயகன்பாளையம், பனமரத்துப்பட்டி, ஓமலூர், வாழப்பாடி, வீரப்பாண்டி ஆகிய பகுதிகளில் மஞ்சள் பயிரிடப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில், 5,000 ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு, 17 ஆயிரத்து, 500 ரூபாய்க்கு மஞ்சள் விற்பனை செய்யப்பட்டதால், 12 ஆயிரத்து, 500 ஹெக்டேரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. இதில், 1.5 லட்சம் மெட்ரிக் டன், மஞ்சள் அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம், பதப்படுத்தப்பட்ட மஞ்சள், 50 ஆயிரம் டன் கிடைத்தது. தற்போது, விலை படிப்படியாக சரிந்து, மார்க்கெட்டில், 4,000 முதல் 6,000 ரூபாயாக உள்ளது.

நடப்பு ஆண்டு, 8,500 ஹெக்டேரில் மட்டுமே மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இதனால், 90 ஆயிரம் டன் மஞ்சள் மகசூல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விலை உயர வாய்ப்பு உள்ளது, என விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

இது குறித்து வேளாண்மை அதிகாரி கூறியதாவது:

கடந்த ஆண்டு அதிகமான சாகுபடியால், மஞ்சள் விலை விழ்ச்சியடைந்தது. இந்த ஆண்டு, 4,000 ஹெக்டேர் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. மேலும், மரவள்ளி, மக்காச்சோளம் போன்ற மாற்று பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்யத் துவங்கி உள்ளனர். மற்ற மாவட்டங்களில் விளைச்சலை பொறுத்து, மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## முன்னாள் துணை சபாநாயகர் பேச்சு காவிரி தண்ணீர் இல்லாததால் டெல்டா விவசாயி தற்கொலை

நாமக்கல்: ""காவிரியில் தண்ணீர் இல்லாததால், குறுவை, சம்பா சாகுபடி செய்ய முடியாமல், ஆறு விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்," என்று, முன்னாள் துணை சபாநாயகர் துரைசாமி பேசினார்.

தொடர் மின்வெட்டைக் கண்டித்து, நாமக்கல் ஆர்.டி.ஓ., அலுவலகம் முன் நாமக்கல் நகரம் மற்றும் ஒன்றிய தி.மு.க., சார்பில் ஆர்பாட்டம் நடந்தது.

முன்னாள் துணை சபாநாயகர் துரைசாமி தலைமை வகித்துப் பேசியதாவது:

காவிரியில் தண்ணீர் திறந்துவிடுமாறு உச்சநீதிமன்றம், கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டும் ஒரு சொட்டு தண்ணீர் கூட தரப்படவில்லை. தொடர் மின்தடை மற்றும் காவிரியில் தண்ணீர் இல்லாததால் குறுவை, சம்பா சாகுபடி செய்யமுடிவில்லை. அந்த பாதிப்பு காரணமாக, ஆறு விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். உத்திரபிரதேசம், ஆந்திரா ஆகிய

மாநிலங்களுக்கு அடுத்ததாக, தமிழகம், விவசாயிகள் தற்கொலையில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் டெங்கு பாதிப்பு அதிகம் உள்ளது. அந்த நோய் பாதித்து, 300க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக, தொடர் மின்வெட்டைக் கண்டித்து கோஷம் எழுப்பப்பட்டது. நகரச் செயலாளர் செல்வராஜ், ஒன்றிய செயலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிர்வாகிகள் பார் இளங்கோவன், அக்தர்ஜான், ஆனந்தன், மணிமாறன், சரஸ்வதி ஆகியோர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## பி.டி., பருத்தி சாகுபடி குறித்து வேளாண் துறை அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பி.டி., பருத்தி சாகுபடி செய்வது குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை:

தர்மபுரி மாவட்டத்தில், தற்போது, 37 ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குளிர் கால பருத்தி சாகுபடியில், 100 சதவீதம் பி.டி, மரபணு மாற்றம் செய்யப்பட்ட வீரிய ஒட்டு ரக பருத்தியே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தியை சாகுபடி செய்யும் போது, அதற்கான தொழில் நுட்பங்களை கடை பிடித்தால் மட்டுமே பூச்சிகளுக்கு எதிர்ப்பு சக்தி ஏற்படாமல் பாதுகாத்து உயர் விளைச்சல் பெற முடியும். பருத்தியில் காய்ப்புழு தாக்குதல் மூலம் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்க, அளவுக்கு அதிகமாக பூச்சி மருந்துகளை உபயோகிப்பதை குறைக்கும் பொருட்டு, பி.டி., பருத்தி உருவாக்கப்பட்டது.

பி.டி., பருத்தி என்பது "பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்' என்னும் பாக்டீரியாவில் இருந்து பருத்தி காய்ப்புழு வகை பூச்சிகள் (லெபிடாப்டிரன்) உணவு பாதையை சிதைக்கும் மரபணுக்களான கிரை 1ஏசி மற்றும் கிரை இரண்டு ஆகியவற்றை பருத்தியில் புகுத்தப்பட்டு உருவாக்கப்பட்டது.

இந்த மரபணு புகுத்தப்பட்டதன் விளைவாக பருத்தியை தாக்கி உண்ணும் காய்ப்புழுக்களின் உணவு பாதையின் செல்கள் தகர்க்கப்பட்டு, அப்புழுக்கள் இறந்து விடுகின்றன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி ரகங்களை சாகுபடி செய்யும் போது, காய்ப்புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான பூச்சி மருந்து செலவு குறைந்து விவசாயிகளுக்கு லபாம் அதிகம் கிடைக்கிறது.

மாவட்டத்தில், தற்போது, சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி வயல்கள் மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்ட வட்டாரங்களில், எம்.ஆர்.சி., 6918 பி.ஜி.,1 மற்றும் எம்.ஆர்.சி.7918 பி.ஜி.,

இரண்டு ஆகிய வீரிய ஒட்டு பி.டி., பருத்தி ரகங்களும், மற்ற வட்டாரங்களில் பன்னி பி.ஜி., இரண்டு பி.டி., எம்.ஆர்.சி., 7351 பி.ஜி., இரண்டு பி.டி., விஸ்வநாத் பி.டி., மற்றும் துளசி பி.ஜி., இரண்டு பி.டி., ஆகிய வீரிய ஒட்டு பி.டி., பருத்தி ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
பி.டி., பருத்தியை மானாவாரியாக பயிர் செய்யாமல் நல்ல நீர் பாசன வசதியுள்ள இடங்களில் மட்டுமே சாகுபடி செய்ய வேண்டும். ஆனால், தற்போது, 80 சதவீதம் பருத்தி மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ளது. இந்த ரக பருத்தியை சாகுபடி செய்யும் போது, முக்கியமாக ரெப்யூஜ் எனப்படும் பி.டி., புகுத்தப்படாத பருத்தி ரகங்களை அடைக்கலப்பயிராக வயல்களை சுற்றி மூன்று அல்லது நான்கு வரிசைகளில், 20 சதவீதம் அளவுக்கு சாகுபடி செய்ய வேண்டும்.
இவ்வாறு சாகுபடி செய்வதால், பருத்தியில் தோன்றும் காய்ப்புழுக்கள், பி.டி., பருத்தியை தாக்காமல் அடைக்கல வரிசையில் உள்ள பயிர்களை தாக்கும். அடைக்கல வரிசை பயிர் விதைகளை வயலை சுற்றி விதைக்காததால், தற்போது, அடைக்கலப்பயிராக துவரை விதை பி.டி.,பருத்தி விதை வாங்கும் பாது உடன் வழங்கப்படுகிறது.
அடைக்கல வரிசை பயிர்களில் சேதம் அதிகரிக்கும் போது, அவ்வரிசைகளுக்கு மட்டும் மருந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். ரெப்பூஜ் பயிர் வரிசை சாகுபடி செய்யவில்லை என்றால் பருத்தி காய்ப்புழுக்கள் பிடி பருத்தியை தாக்கி இறந்தாலும் நாளடைவில் அவைகளுக்கு எதிர்ப்பு சக்தி உண்டாகிவிடும்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பனிப்பொழிவால் விளைச்சல் பாதிப்பு "பீடா' வெற்றிலை விலை திடீர் உயர்வு

லாலாப்பேட்டை: பனிப்பொழிவு காரணமாக கிருஷ்ணராயபுரம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள "பீடா' தயாரிக்க பயன்படும் வெள்ளைக்கொடி வெற்றிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், விலை உயர்ந்துள்ளது.
கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்குட்பட்ட லாலாப்பேட்டை, கிருஷ்ணராயபுரம், மகாதானபுரம், மகிளிப்பட்டி, வல்லம், பிள்ளப்பாளையம், கருப்பத்தூர் ஆகிய பகுதிகளில், 500க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
கற்பூரம், வெள்ளைகொடி ஆகிய இரண்டு ரக வெற்றிலை அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் பனிப்பொழிவு காரணமாக, வெற்றிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வெள்ளைக்கொடி வெற்றிலை விளைச்சல் மோசமாக உள்ளது.
இந்த ரக வெற்றிலை தான் அதிகளவு பீடா ஸ்டால்களில் பயன்படுத்தப்படுகிறது. வெள்ளைக்கொடி வெற்றிலை விலை தற்போது உயர்ந்துள்ளது.
100 கவுளி கொண்ட ஒரு மூட்டை, 2,100 ரூபாய் முதல், 2,700 ரூபாய் வரையிலும், கற்பூர ரகம், 3,000 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம், 500 ரூபாய் முதல், 1,000 ரூபாய் வரை,

விலை இருந்த வெள்ளைக்கொடி, திடீரென, 3,000 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## "சம்பா' வயல்கள் தண்ணீரின்றி வெடிப்பு

திருத்துறைப்பூண்டி: டெல்டா பாசன மாவட்டங்களில் ஆறுகளில் தண்ணீர் வரத்து அறவே இல்லாமல், வாய்க்கால்களும் வறண்டு காட்சியளிக்கும் நிலையில், பாளம், பாளமாக வெடித்த வயல்களில், சம்பா பயிர் முழுவதும் காய்ந்து கருகி அழிந்து வருவதால் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.

காவிரி டெல்டா பாசன மாவட்டங்களில் நடப்பாண்டு காவிரி கைவிட்டதாலும், மழை பொய்த்ததாலும், குறுவை சாகுபடி அறவே பாதித்து, விவசாயிகள் வேதனையில் ஆழ்ந்தனர். இந்நிலையில் மேட்டூர் அணையில் தண்ணீர் தாமதமாக செப்., 17ம் தேதி திறக்கப்பட்டும், சம்பா சாகுபடிக்கு போதிய நீர் இதுவரை வந்து சேரவில்லை. இந்நிலையில் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு, கண்காணிப்புக்குழு மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவு ஆகியவற்றை கர்நாடகா மாநில அரசும் சற்றும் மதிக்காமல், தொடர்ந்து தமிழகத்தின் பங்களிப்பு காவிரி நீரை தராமல் வஞ்சித்து வருகிறது.

இதையடுத்து டெல்டா பாசன மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில், 13 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர்கள் கருகி வருகின்றன. தஞ்சை, திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஆறுகளில் தண்ணீரின்றி, வாய்க்கால்கள் வறண்டு விட்டன. வயல்களும் சம்பா பயிரிட்ட நிலையில், பாளம், பாளமாக வெடித்து விட்டன. ஆற்றில் வரும் சிறிதளவு தண்ணீரும் வாய்க்கால்களுக்கு சென்றடையவில்லை.

வயல்கள் பாளம், பாளமாக வெடித்த நிலையில், பயிர்கள் தற்போது "சூல்' கட்ட வேண்டிய பருவத்தில், கருகருவென வளர்ந்த பயிர்களும் முழுவதும் காய்ந்து, கருக துவங்கி விட்டன. அவ்வப்போது வானத்தில் மேகமூட்டம் திரண்டு மப்பும், மந்தாரமுமாக தெரிந்தாலும், மழை பெய்யாமல் போக்கு காட்டி வருகிறது. தினமும் விவசாயிகள் வயலுக்கு சென்று வானத்தையும், கருகிய சம்பா பயிர்களை பார்த்து ஏங்கி வருகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் சில இடங்களில் வேறு வழியின்றி கால்நடைகளை, தீவனமாக வயலில் கருகிய சம்பாவில் மேயவிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள நெடும்பலம் விவசாயி கரிகாலன் கூறியதாவது: டெல்டா பாசன மாவட்டத்தில், 13 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்கள் காவிரி நீரின்றி காய்ந்து விட்டன. இப்பகுதியில், சம்பா பயிர் சாகுபடிக்காக டிசம்பர், முதல்வாரத்தில் தண்ணீர் விட்டு, ஓரளவு பயிர்களை காப்பாற்றியிருந்தால் நல்ல மகசூல் கிடைத்திருக்கும். ஆனால், கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து தண்ணீரின்றி, நெற்பயிர்கள் காய துவங்கி விட்டன. கடந்த செப்., மாதம் முதல்வாரத்தில் நேரடி விதைப்பு செய்திருந்த நெற்பயிர்கள் அனைத்தையும், இனிமேல் மழை

பெய்தாலும், காவிரி நீர் வந்தாலும் காப்பாற்ற வாய்ப்பும் வழியுமில்லை.
எனவே மனமுடைந்து, துவண்டு போயுள்ள டெல்டா மாவட்ட விவசாயிகளின் குடும்பங்களை தற்கொலை சாவிலிருந்து காக்க, அரசு காலம் தாழ்த்தாமல் பாசன மாவட்ட பகுதிகளை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## மஞ்சள் விலை உயரும் வாய்ப்பு சேலம் மாவட்டத்தில் சாகுபடி பரப்பு குறைவு

சேலம்: சேலம் மாவட்டத்தில், மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்ததால், விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.
ஈரோட்டுக்கு அடுத்ததாக, சேலம் மாவட்டத்தில் மஞ்சள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம், ஆத்தூர், கெங்கவள்ளி, பெத்தநாயகன்பாளையம், பனமரத்துப்பட்டி, ஓமலூர், வாழப்பாடி, வீரப்பாண்டி ஆகிய பகுதிகளில் மஞ்சள் பயிரிடப்படுகிறது.
சேலம் மாவட்டத்தில், 5,000 ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு, 17 ஆயிரத்து, 500 ரூபாய்க்கு மஞ்சள் விற்பனை செய்யப்பட்டதால், 12 ஆயிரத்து, 500 ஹெக்டேரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. இதில், 1.5 லட்சம் மெட்ரிக் டன், மஞ்சள் அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம், பதப்படுத்தப்பட்ட மஞ்சள், 50 ஆயிரம் டன் கிடைத்தது. தற்போது, விலை படிப்படியாக சரிந்து, மார்க்கெட்டில், 4,000 முதல் 6,000 ரூபாயாக உள்ளது.
நடப்பு ஆண்டு, 8,500 ஹெக்டேரில் மட்டுமே மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இதனால், 90 ஆயிரம் டன் மஞ்சள் மகசூல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விலை உயர வாய்ப்பு உள்ளது, என விவசாயிகள் காத்திருக்கின்றனர்.
இது குறித்து வேளாண்மை அதிகாரி கூறியதாவது:
கடந்த ஆண்டு அதிகமான சாகுபடியால், மஞ்சள் விலை விழ்ச்சியடைந்தது. இந்த ஆண்டு, 4,000 ஹெக்டேர் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. மேலும், மரவள்ளி, மக்காச்சோளம் போன்ற மாற்று பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்யத் துவங்கி உள்ளனர். மற்ற மாவட்டங்களில் விளைச்சலை பொறுத்து, மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பி.டி., பருத்தி சாகுபடி குறித்து வேளாண் துறை அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பி.டி., பருத்தி சாகுபடி செய்வது குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை:
தர்மபுரி மாவட்டத்தில், தற்போது, 37 ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குளிர் கால பருத்தி சாகுபடியில், 100 சதவீதம் பி.டி, மரபணு மாற்றம் செய்யப்பட்ட வீரிய ஒட்டு

ரக பருத்தியே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தியை சாகுபடி செய்யும் போது, அதற்கான தொழில் நுட்பங்களை கடை பிடித்தால் மட்டுமே பூச்சிகளுக்கு எதிர்ப்பு சக்தி ஏற்படாமல் பாதுகாத்து உயர் விளைச்சல் பெற முடியும். பருத்தியில் காய்ப்புழு தாக்குதல் மூலம் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்க, அளவுக்கு அதிகமாக பூச்சி மருந்துகளை உபயோகிப்பதை குறைக்கும் பொருட்டு, பி.டி., பருத்தி உருவாக்கப்பட்டது.
பி.டி., பருத்தி என்பது "பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்' என்னும் பாக்டீரியாவில் இருந்து பருத்தி காய்ப்புழு வகை பூச்சிகள் (லெபிடாப்டிரன்) உணவு பாதையை சிதைக்கும் மரபணுக்களான கிரை 1ஏசி மற்றும் கிரை இரண்டு ஆகியவற்றை பருத்தியில் புகுத்தப்பட்டு உருவாக்கப்பட்டது.
இந்த மரபணு புகுத்தப்பட்டதன் விளைவாக பருத்தியை தாக்கி உண்ணும் காய்ப்புழுக்களின் உணவு பாதையின் செல்கள் தகர்க்கப்பட்டு, அப்புழுக்கள் இறந்து விடுகின்றன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி ரகங்களை சாகுபடி செய்யும் போது, காய்ப்புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான பூச்சி மருந்து செலவு குறைந்து விவசாயிகளுக்கு லபாம் அதிகம் கிடைக்கிறது.
மாவட்டத்தில், தற்போது, சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி வயல்கள் மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்ட வட்டாரங்களில், எம்.ஆர்.சி., 6918 பி.ஜி.,1 மற்றும் எம்.ஆர்.சி.7918 பி.ஜி., இரண்டு ஆகிய வீரிய ஒட்டு பி.டி., பருத்தி ரகங்களும், மற்ற வட்டாரங்களில் பன்னி பி.ஜி., இரண்டு பி.டி., எம்.ஆர்.சி., 7351 பி.ஜி., இரண்டு பி.டி., விஸ்வநாத் பி.டி., மற்றும் துளசி பி.ஜி., இரண்டு பி.டி., ஆகிய வீரிய ஒட்டு பி.டி., பருத்தி ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
பி.டி., பருத்தியை மானாவாரியாக பயிர் செய்யாமல் நல்ல நீர் பாசன வசதியுள்ள இடங்களில் மட்டுமே சாகுபடி செய்ய வேண்டும். ஆனால், தற்போது, 80 சதவீதம் பருத்தி மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ளது. இந்த ரக பருத்தியை சாகுபடி செய்யும் போது, முக்கியமாக ரெப்யூஜ் எனப்படும் பி.டி., புகுத்தப்படாத பருத்தி ரகங்களை அடைக்கலப்பயிராக வயல்களை சுற்றி மூன்று அல்லது நான்கு வரிசைகளில், 20 சதவீதம் அளவுக்கு சாகுபடி செய்ய வேண்டும்.
இவ்வாறு சாகுபடி செய்வதால், பருத்தியில் தோன்றும் காய்ப்புழுக்கள், பி.டி., பருத்தியை தாக்காமல் அடைக்கல வரிசையில் உள்ள பயிர்களை தாக்கும். அடைக்கல வரிசை பயிர் விதைகளை வயலை சுற்றி விதைக்காததால், தற்போது, அடைக்கலப்பயிராக துவரை விதை பி.டி.,பருத்தி விதை வாங்கும் பாது உடன் வழங்கப்படுகிறது.
அடைக்கல வரிசை பயிர்களில் சேதம் அதிகரிக்கும் போது, அவ்வரிசைகளுக்கு மட்டும் மருந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். ரெப்பூஜ் பயிர் வரிசை சாகுபடி செய்யவில்லை என்றால் பருத்தி காய்ப்புழுக்கள் பிடி பருத்தியை தாக்கி இறந்தாலும் நாளடைவில் அவைகளுக்கு எதிர்ப்பு சக்தி உண்டாகிவிடும்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாகனேரியில் நெற்பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் பகீரதம்

பாகனேரி : பாகனேரியில், கருகவிடாமல் நெற்பயிர்களை காப்பாற்ற டீசல் மோட்டார்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.பாகனேரி, காடனேரி, நகரம்பட்டியை சுற்றி ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் நெல் நடவு செய்துள்ளனர். இவற்றை, அறுவடை செய்வதற்கு முன், பகுதி விளைந்துள்ள நிலையில், போதிய தண்ணீரின்றி பயிர்கள் கருகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் விளைந்த நெற்பயிர்களை காப்பாற்ற வயலில் இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும், என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், விவசாயிகள் சுற்றியுள்ள கிணறுகளில் இருந்து, டீசல் மோட்டார்கள் மூலம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.300 வாடகை கொடுத்து தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். பாகனேரி விவசாயி அய்யப்பன் கூறுகையில்,"" கண்மாய்களில் தண்ணீரின்றி, நெற்பயிர்கள் கருகி வருகின்றன. இவற்றை காப்பாற்ற கிணறுகளில் இருந்து "பைப்'கள் மூலம் தண்ணீர் எடுத்து பாய்ச்சவேண்டியுள்ளது. விவசாய நிலங்களில் அதிகாரிகள் ஆய்வு செய்து, இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்," என்றார்.

## வேளாண்மை மையங்களில் வீணாகும் "கோணாவீடர்'

காஞ்சிபுரம் : விவசாயிகளுக்கு வழங்க உள்ள, களை எடுக்கும் கருவி "கோணாவீடர்' சிறுகாவேரிபாக்கம் வேளாண்மை விரிவாக்கம் மையத்தில், துருபிடித்து வீணாகி வருகிறது.திருந்திய நெல் சாகுபடிக்கு தேவையான ஐந்து கிலோ விதை, யூரியா ஆகியவற்றை, வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் வாங்கி செல்லும் விவசாயிகளுக்கு, களை எடுக்கும் கருவியான "கோணாவீடர்' மற்றும் நாற்றுக்களை வரிசையாக நட அளவிடும் கருவி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.இதற்காக, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இவை இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ஆனால், சிறுகாவேரிபாக்கம் வேளாண்மை விரிவாக்க மையத்தில், 200க்கும் மேற்பட்ட களை எடுக்கும் கருவி "கோணாவீடர்' ஐந்து மாதங்களாக விவசாயிகளுக்கு வழங்கப்படாமல், துருபிடித்து வருகின்றன. இதே நிலை தான் பெரும்பாலான மையங்களில் காணப்படுகிறது. வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""களை எடுக்கும் கருவி கோணாவீடரை, உடனடியாக எடுத்து செல்லும்படி கூறுகிறோம். அதற்கு அவர்கள், ஒரே நேரத்தில் எடுத்து செல்வதாக கூறிவிட்டு, சென்றுவிடுகின்றனர். இம்மாத இறுதிக்குள் அவற்றை வழங்க ஏற்பாடு செய்யப்படும்," என்றார்.

விவசாய மலர்

## சூரியகாந்தி சாகுபடி நுட்பங்கள்

கார்த்திகைப் பட்டத்தில் கரிசல் மண்ணில் சூரியகாந்தி சாகுபடி துவங்க உள்ளது. சூரியகாந்தி பயிரின் வயது 80-85 நாட்களாகும். சாகுபடிக்கு ஏற்ற ரகங்கள் அட்வான்ஸ் கார்கில், கே.பி.எஸ்.எச்.1, மாடர்ன் மற்றும் கோ.3. ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதை தேவைப்படும். நீண்ட கால விதை ரகங்களை 60க்கு 15செ.மீ. இடைவெளியிலும், குறுகிய கால விதை ரகங்களை 30க்கு 15 செ.மீ. இடைவெளியிலும் விதைக்க வேண்டும். விதை முளைப்பு சீராக இருப்பதற்கு தண்ணீரில் ஊறவைத்து பின் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். நீண்டகால ரகமாக இருந்தால் சதுரமீட்டரில் 12 செடிகளும், குறுகிய கால ரகமாக இருந்தால் சதுர மீட்டரில் 24 செடிகளும் இருக்கும்படி கவனித்துக்கொள்ள வேண்டும். ஒரு கிலோ விதையுடன் 42 கிராம் திரம் என்னும் மருந்தைக் கலந்து விதைக்க வேண்டும்.

ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டிகள் நன்கு மக்கிய தொழு உரம் இட்டு நிலத்தைப் பண்பட உழ வேண்டும். தொழு உரத்தோடு உயிர் உரமாகிய அசோஸ்பைரில்லத்தையும் கலந்து இடவேண்டும். 10 கிலோ தொழு உரம், 10 கிலோ மண் இவற்றுடன் 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தையும் கலந்து வயலில் சீராகத் தூவ வேண்டும். ஏக்கருக்கு அடி உரமாக தழைச்சத்து 8 கிலோ, மணிச்சத்து 8 கிலோ, சாம்பல்சத்து 8 கிலோ ஆகியவை கிடைப்பதற்கு ஏற்ற ரசாயன உரங்களை இடவேண்டும். கடைசியாக 5 கிலோ நுண்ணூட்டச் சத்துக்களை 15 கிலோ ஆற்று மணலுடன் கலந்து ஏக்கர் பரப்பில் சீராகத் தூவ வேண்டும்.

**விதைத்தல்:**

விதையுடன் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தைக் கலந்து விதைக்கலாம். விதைக்கும் நிலத்தில் விதையை உளுந்து தெளிப்பது போல் தெளித்து விதையை மண்ணால் மூடி, பின் பாத்தி கட்டி பாசனம் செய்து சதுர மீட்டரில் ரகங்களுக்குத் தக்கவாறு 12 அல்லது 24 செடிகள் உள்ளபடி செய்து அதிகமாக இருக்கும் செடிகளைக் களைந்துவிடலாம். இல்லையேல் பாருக்கு பார் 60 அல்லது 30 செ.மீ. உள்ளபடி அமைத்துக் கொண்டு விதையை பாருக்கு பக்கவாட்டில் 15 செ.மீ. இடைவெளியில் ஊன்றலாம். 10வது நாளில் நன்கு வளர்ந்த ஒரு செடியை விட்டுவைத்து மற்ற செடிகளைக் களையெடுக்க வேண்டும்.

சூரியகாந்தி பயிருக்கு ஒரு முறை களையெடுத்து நிலத்தைக் கொத்திவிட்டு பின் மீதமுள்ள தழைச்சத்தாகிய 18 கிலோ அளவை மேலுரமாக இடவேண்டும். இதற்கு 18 கிலோ யூரியா இடவேண்டும்.

விதை விதைப்பதற்கு முன் விதைத்த நான்காம் நாள் உயிர்த்தண்ணீர், விதைத்த 20ம் நாள், 35ம் நாள், 40ம் நாள், 60ம் நாள், 20-25வது நாள் மொட்டுகள் உருவாகும் சமயம், 30-45வது நாள் பூக்கள் மலரும் போதும், 50-60வது நாள் விதை முற்றும் சமயம் மண்ணில் ஈரம் இருக்கும்படியாக நீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தில் நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். அறுவடைக்கு ஒரு வாரம் முன் பாசனத்தை முற்றிலும் நிறுத்திவிட வேண்டும். விதைத்த 30வது நாள் ஏக்கருக்கு 111 மில்லி பிளானோபிக்ஸ் பயிர் ஊக்கியை 250 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இது பூக்களில்

அதிக விதை பிடிக்க உதவுகின்றது.
சூரியகாந்தியில் அயல் மகரந்த சேர்க்கையை ஏற்படுத்தி அதிக விதை உற்பத்தி செய்யலாம். இதற்கு பூ மலர்ந்த பிறகு காலை 9 மணியிலிருந்து 11 மணிக்குள் தொடர்ந்து 10 நாட்களுக்குள் மற்றொரு பூவுடன் உராயும்படி செய்ய வேண்டும். பூக்களில் விதைகள் முதிர்ச்சி அடையும்போது பச்சைக்கிளிகள் பூக்கொண்டைகளை அலகால் கொத்தி கடும் சேதத்தை உண்டாக்கும். டப்பாக்களைத் தட்டி சத்தம் எழுப்பி கிளிகளைத் துரத்தவேண்டும்.

**அறுவடை:**
சூரியகாந்தி பூக்களின் அடி பாகம் மஞ்சள் நிறமாக மாறிய உடன் பூக்களை அறுவடை செய்து களத்துமேட்டில் காயப்போட வேண்டும். பூக்கள் சரியாக காயாமல் இருக்கும்போது கோணிச்சாக்கில் சேமித்தால் அவற்றில் பூசணம் வளர்ந்து நஷ்டம் ஏற்படும். களத்துமேட்டில் அடிக்கடி பூக்களை கிளறிவிட்டு நன்கு காயப்போட வேண்டும். நன்கு உலர்ந்த பூக்களை தடியால் அடித்து விதையைப் பிரித்து அவற்றை சுத்தம் செய்து விற்பனை செய்துவிடலாம். நல்ல முறையில் சாகுபடி நுட்பங்களை அனுசரித்தால் கணிசமான லாபத்தை அடையமுடியும்.

## சின்னசின்ன செய்திகள்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலிருந்து பழப்பயிர்களில் 33 ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் சப்போட்டா ரகங்களான பி.கே.எம்.1, பி.கே.எம்.4, பி.கே.எம்.5, பப்பாளி ரகங்களான கோ.2, கோ.7, நெல்லி ரகம் பி.எஸ்.ஆர்.1, அருப்புக்கோட்டை சீதா 1 ரகம் ஆகியவை இந்திய அளவில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. வாழையில் நூற்புழு எதிர்ப்பு ரகங்களான எச்.212, எச்.531, எச்.9617, என்.பி.எச்.02-01 ஆகியவை இறுதிக்கட்ட பரிசோதனையில் உள்ளன.

**மஞ்சள் நாற்று நடவு:**
பொதுவாக மஞ்சள் பயிர் கிழங்கின் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. மஞ்சள் நடவிற்கு விரலி, குண்டு மஞ்சள் பயன்படுகிறது. விதை மஞ்சள் 25 முதல் 30 கிராமிற்கு குறையாமலும் 3 முதல் 4 பரு கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஒரு எக்டருக்கு 2000 முதல் 2500 கிலோ விதைமஞ்சள் தேவைப்படுகிறது.
பவானி சாகரிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் விதை கிழங்கிற்குபதிலாக மஞ்சள் நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. மஞ்சள் நாற்றை நாம் விதை கிழங்கின் மூலம் சாகுபடி செய்வதைப்போல் சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு தேவையான நாற்றுக்களை உற்பத்தி செய்ய 500 கிலோ மஞ்சள் போதுமானது. ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 55,000 முதல் 60,000 நாற்றுகள் தேவைப்படுகிறது. விதைக்கிழங்கினை பயன்படுத்தும்போது 80 சதவீதம்தான்

முளைப்புத்திறன் இருக்கும். ஆனால் நாற்றுக்களை நடவிற்கு பயன்படுத்துவதால் 98 சதவீதம் பயிர்கள் முளைத்திருக்கும். நாறறுக்கள் நட்ட 2ம் மாதத்திலேயே கிழங்கு உருவாக ஆரம்பித்துவிடும். 8ம் மாதத்தில் நன்கு திரட்சியடைந்து 5 முதல் 6 தூர்கள் கொண்ட கிழங்குகள் அறுவடைக்கு தயாராகிவிடும். மிதமான அளவுக்கு நோய், பூச்சி தாக்குதல் இருக்கும். பொருளாதார சேத நிலையைத் தாண்டும்போது தகுந்த பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். விதைக்கிழங்கு பயிரிட்டு கிடைக்கும் மகசூலைவிட அதிகபட்சமாக 50 சதவீதம் வரை நாற்றுக்கள் நடுவதன் மூலம் பெறலாம்.

(தகவல்: பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்-638 451, போன்: 04295-240 244).

**மா:**

அடர்நடவு முறையில் இரு அடுக்கு முறையில் 10x5x5 மீட்டர் இடைவெளியில் நெருக்கி நடவு செய்வதால் எக்டருக்கு 260 கன்றுகளை நடவு செய்யலாம். இரு அடுக்குகளுக்கு இடையில் 10 மீட்டர் இடைவெளி இருப்பதால் டிராக்டர் மூலம் மருந்து தெளிக்கவும், அறுவடை செய்யவும் இன்னும் பிற பயிர் பராமரிப்பு வேலைகளை செய்யவும் ஏற்றதாக இருக்கும். தற்போது அதிஅடர்நடவு முறையில் 3x2 மீட்டர் இடைவெளியில் ஒரு எக்டருக்கு 1666 மரங்கள் நடவு செய்வதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டிசம்பர் - ஜனவரி மாதங்களில் 10 செ.மீ. அளவில் நுனிக்கவாத்து செய்வதன் மூலமாகவும் அதையொட்டி பேக்லோபூட்ரசால் 0.75 கிராம்/மரம் என்ற அளவில் மார்ச்-ஏப்ரல் மாதங்களில் ஊற்றுவதன் மூலம் இடைப்பருவ காய்ப்பை பெறலாம். இலைவழியாக 20 கிராம்/லிட்டர் தண்ணீர் அளவில் சல்பேட் ஆப் பொட்டாஷ் உரத்தினைப் பூக்கும் தருணத்திலும் பின் காய்பிடிப்பு தருணத்திலும் தெளிப்பதன் மூலமாக காய்பிடிப்பினை அதிகரிக்கச் செய்வதோடு விளைச்சலையும் அதிகரிக்கலாம்.

**வாழை:**

தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் திசுவளர்ப்பு வாழைகளே பயிரிடப்பட்டு வருகின்றன. வாழையில் அடர்நடவு முறையில் 1.8x3.6 மீட்டர் இடைவெளியில் 3 கன்றுகள் குழிக்கு நடவு செய்வதன் மூலம் எக்டருக்கு 4630 கன்றுகள் நடவு செய்ய முடியும். இம்முறையில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் உரமிடுவதால் விளைச்சல் எக்டருக்கு 50 சதவீதம் வரை அதிகரிக்கலாம். நீர்த்தேவையும் உரத்தேவையும் குறைக்கப் படுவதால் அதிகம் லாபம் பெறலாம்.

வாழையில் பரிந்துரைக்கப்பட்ட உர அளவான தழை:மணி:சாம்பல் சத்து 110:35:330 கிராம்/மரம் என்ற அளவை அடர்நடவு முறையில் ஒரு குழியில் உள்ள 3 கன்றுகளுக்கு அளிக்கும்போது 75 சதவீத உரங்களை அளித்தாலே போதுமானது. அதாவது ஒரு குழிக்கு (3 கன்றுகள்) தேவையான உர அளவு 247.5 : 78.75 : 742.5 கிராம் தழை, மணி, சாம்பல் சத்து மட்டுமே நீர்வழி உரமிடல்

மூலம் பகிர்ந்தளிக்கலாம்.

வாரங்கள் - தழை(%) - மணி(%) - சாம்பல்சத்து(%)

9-18 (10 வாரங்கள்) - 30 - 100 - 20

19-30 (12 வாரங்கள்)- 50 - 0 - 40

31-42 (12 வாரங்கள்) - 20 - 0 - 32

43-45 (13 வாரங்கள்) - 0 - 0 - 8

(தகவல்: முனைவர் ப.சுப்பையா, பதிவாளர், த.வே.ப.கழகம், கோவை-641 003)

## பயிர் நூற்புழுக்களைக் கண்டறிதல்

பயிர்களைத் தாக்கக்கூடிய பூச்சிகள், நோய்கள், எலிகள் மற்றும் களைகள் போன்ற கண்ணுக்குத் தெரிகின்ற எதிரிகளை உழவர்கள் நன்கு அறிந்து அவைகளை திறம்பட கட்டுப்படுத்தி வருகின்றார்கள். பலசெல் உயிரினங்களில் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகமாகக் காணப்படும் உயிரினமான நூற்புழு பூமியில் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

தாவர நூற்புழுக்கள் நீளம் சுமார் 1 மி.மீ. முதல் 10 மி.மீ. வரை இருக்கும். இவை மண்ணிலும் செடியின் வேர் பகுதியிலும் மறைந்து வாழ்கின்றன. நூற்புழுக்களுக்கு ஊசி போன்ற அலகு உண்டு. அத்தகைய அலகைக்கொண்டு நூற்புழுக்கள் பயிர்களின் வேர் பகுதியிலுள்ள செல் சாற்றை உறிஞ்சிக் குடிக்கின்றன. மேலும் அலகினால் வேரைத்துளைக்கும்போது எண்ணற்ற காயங்களையும் வேரில் உண்டுபண்ணுகிறது. தமிழகத்தில் இதுவரை 90க்கும் மேற்பட்ட நூற்புழுக்கள் பயிர்களைத் தாக்கி சேதத்தை ஏற்படுத்தி வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களைத் தாக்கும் நூற் புழுக்களைப் பற்றிக் காண்போம்.

**வேர்முடிச்சு நூற்புழு:**

பொதுவாக வேர்முடிச்சு நூற் புழுக்கள் அனைத்துவிதமான பயிர்களையும் குறிப்பாக காய்கறிப் பயிர்களைத் தாக்குகின்றன. இந்நூற்புழுக்கள் வேரின் உள்ளே புகுந்து பயிரினைப் பெரிதும் பாதிக்கின்றன. இரண்டாம் நிலை நூற் புழுக்கள் வேரினுள் புகுந்தபின் கார்டக்ஸ் பகுதியில் செல் சாற்றை உறிஞ்சுவதால் செல்களில் மாற்றம் உண்டாகும். அதனால் செல்கள் அதிக எண்ணிக்கையில் உற்பத்தியாகி அதிக பருமனுடன் காணப்படும். வளருகின்ற பெண் நூற்புழுக்களும் முதிர்ச்சி அடைந்து பருமனாக மாறும். இந்த அழுத்தத்தினால் பயிர் நீர் கடத்தும் குழாய்கள் ஒரு பக்கமாக தள்ளப்பட்டு அதிக பாதிப்பிற்கு உள்ளாகிறது. எனவே, நீர் மற்றும் சத்துப் பொருட்களைக் கிரகிக்க முடியாமல் பயிர் வாட்டத்துடன் காணப்படும். பெண் நூற்புழுக்களிலுள்ள ஜெலாட்டின் கூட்டினுள் 200 முதல் 300 முட்டைகளை உற்பத்தி செய்கிறது.

அவரை விதை வடிவ நூற்புழு: இந்நூற்புழுக்கள் பருத்தி, அவரை, பப்பாளி, ஆமணக்கு சாகுபடி

செய்யப்படும் அனைத்து பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. ஆங்காங்கு வளர்ச்சி குன்றி தென்படுவது இந்நூற்புழு தாக்குதலின் அறிகுறியாகும்.

**துளைக்கும் மற்றும் வேர் அழுகல் நூற்புழு:**
வேர் துளைக்கும் நூற்புழு பயிரின் திசுக்களை அழித்து சேதத்தை உண்டுபண்ணும். இவை வேரின் கார்டெக்ஸ் செல்களை துளைத்துக் கொண்டும் மற்றும் செல்களின் இடைவெளிகளிலும் உட்புகுந்து பாதிப்பை உண்டுபண்ணும். இதனால் வேர்பகுதி பாதிக்கப்பட்டு கருஞ்சிவப்பு கறைகளுடன் காணப்படும். இவ்வாறு தாக்கும் போது வேர் சிறுத்தல், வேர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மண்ணில் பிடிப்பு இல்லாமல் இருக்கும். இதுபோன்றே இன்னும் முட்டைக்கூடு நூற்புழு, எலுமிச்சை நூற்புழுக்களும் பயிர்களைத் தாக்கும் காரணிகளாகும். தகவல்: முனைவர் சோ.பிரபு, முனைவர் க.முரளிபாஸ்கரன், 99944 86310.

18th dec 2012 P.M

## பருத்தி கொள்முதல் 7.14 லட்சம் பொதிகள்



புது டில்லி: நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், தேசிய பருத்தி கழகம், நடப்பு டிசம்பர் 9ம் தேதி வரையிலான காலத்தில், 7.14 லட்சம் பொதிகளை கொள்முதல் செய்துள்ளது. இதன் மதிப்பு, 1,534 கோடி ரூபாயாகும் என, மத்திய ஜவுளி அமைச்சர் ஆனந்த் சர்மா, பார்லிமென்டில் தெரிவித்தார்.குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப் அரியானா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில், பருத்தியின் விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட அதிகமாக உள்ளது. ஆந்திராவில், பருத்தி விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒட்டியே உள்ளது.நடப்பு 2012-13ம் பருத்தி பருவத்தில் (அக்.,-செப்.,), நடுத்தர வகை மற்றும் நீள்வகை பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, குவிண்டால் ஒன்றுக்கு, முறையே 3,600 ரூபாயாகவும் (முந்தைய விலை ரூ.2,800 ) மற்றும் 3,900 ரூபாயாகவும் (முந்தைய விலை ரூ.3,300) உயர்த்தப்பட்டுள்ளது என, சர்மா மேலும் தெரிவித்தார்.

## மஞ்சள் விலையை விவசாயிகளே நிர்ணயிக்க கோரிக்கை

ஈரோடு: மஞ்சள் விலையை விவசாயிகளே நிர்ணயிக்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை, கடந்த, 13ம் தேதி, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில், எம்.பி., கணேச மூர்த்தி தலைமையில், டில்லியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம், வழங்கப்பட்டது.மாநில அரசுகள் இதையடுத்து, "மஞ்சள் விலையை விவசாயிகளே நிர்ணயிக்க தேவையான உதவிகளை, மத்திய, மாநில அரசுகள் செய்ய பரிந்துரை செய்யப்படும்' என, ஜனாதிபதி உறுதியளித்ததாக, விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி தெரிவித்தார்.அதன் விவரம்: ஆந்திரா, தமிழகம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஒடிசா மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில், 80 சதவீத மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு, 30 முதல், 40 டன் மஞ்சள் உற்பத்தியாகிறது.ஆந்திராவில், 41 சதவீதம், தமிழகத்தில், 21 சதவீதம், இதர பகுதிகளான கர்நாடகா, மகாராஷ்டிராவில், ஏழு சதவீதம் மஞ்சள் உற்பத்தியாகிறது. ஆந்திரா - நிஜாமாபாத், தமிழகம் - ஈரோடு, மகாராஷ்டிரா - சாங்லி ஆகிய மூன்று பெரிய மஞ்சள் சந்தைகள் உள்ளன.கடந்த, 2010 டிசம்பரில், மஞ்சள் குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. இது, நடப்பு 2012, ஜனவரியில், 2,500 ரூபாயாக குறைந்துள்ளது.உற்பத்தி செலவுஒரு ஏக்கர் மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 605 ரூபாய் செலவாகிறது. இதில், 20 குவிண்டால் வரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்படி, குவிண்டாலுக்கு, 8,700 ரூபாய் உற்பத்தி செலவாகிறது.மத்திய அரசு, 4,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறது. அதேபோல், கர்நாடகாவில், 5,000 ரூபாய்க்கு கொள்முதலாகிறது. தமிழக அரசும், மத்திய அரசு அறிவித்த விலைக்கு கொள்முதல் செய்வதால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.இந்தியாவில் விளைபொருட்களில், மிளகாய் அதிக அளவில் அன்னியச் செலவாணியை ஈட்டி தருகிறது. அடுத்தப்படியாக மஞ்சள் உள்ளது. ஆனால், விவசாயிகள் மஞ்சள் இருப்பு வைக்க இடவசதி, பொருளாதார வசதி இன்றி, விற்கும் நிலையில் உள்ளனர்.வங்கி கடன்வங்கியில் குறைந்த வட்டியில், வியாபாரிகளுக்கு கடன் வழங்குகின்றனர். விவசாயிகளுக்கு வழங்குவதில்லை. விவசாயிகளுக்கு, ஒரு குவிண்டால், 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நபார்டு வங்கி மூலம் வழங்க வேண்டும். மஞ்சள் உற்பத்தி மற்றும் விற்பனை சந்தை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு மஞ்சள் ஏற்றுமதி செய்வதை தடுக்க வேண்டும். விவசாயிகள் நலன் கருதி, மஞ்சள் விலையை விவசாயிகளே நிர்ணயம் செய்ய, உதவ வேண்டும்.இவ்வாறு, அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.பரிந்துரைஇந்திய விவசாயிகள் சங்க தலைவர், தெய்வசிகாமணி கூறியதாவது:மஞ்சள் விவசாயிகளின் கோரிக்கைகளை, மத்திய அரசிடம் பரிந்துரைப்பதாக

ஜனாதிபதி தெரிவித்தார். விவசாயிகள் விலை நிர்ணயம் செய்வதை வரவேற்று, அதற்கு தேவையான உதவிகளை மத்திய, மாநில அரசுகள் வழங்குவதற்கு பரிந்துரை செய்வதாகவும், ஜனாதிபதி மேலும் கூறினார்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

### செயற்கை ரப்பர்பயன்பாடு குறையும்



கோட்டயம்: செயற்கை ரப்பருக்கான தேவை குறைந்துள்ளதால், இதன் பயன்பாடு வெகுவாக சரிவடைந்து வருகிறது. இதனால், நடப்பாண்டில், ஒட்டுமொத்த அளவில், செயற்கை ரப்பர் பயன்பாடு குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.செயற்கை ரப்பர் தயாரிப்பிற்கு, கச்சா எண்ணெய் முக்கிய மூலப் பொருளாகத் திகழ்கிறது. கடந்த சில மாதங்களாக, கச்சா எண்ணெய் விலை குறைந்து வருகிறது. இந்நிலையிலும், செயற்கை ரப்பர் பயன்பாடு குறைந்துள்ளது.சென்ற நிதியாண்டில், நாட்டின் இயற்கை ரப்பர் பயன்பாடு, 1.8 சதவீதம் உயர்ந்து, 9.64 லட்சம் டன்னாகவும், செயற்கை ரப்பர் பயன்பாடு, 2.8 சதவீதம் அதிகரித்து, 4.23 லட்சம் டன்னாகவும் உயர்ந்திருந்தன.நடப்பாண்டில், செயற்கை ரப்பரை காட்டிலும், இயற்கை ரப்பர் விலை குறைவாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், நடப்பாண்டில், இயற்கை ரப்பர் பயன்பாடு அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.வாகன டயர் தயாரிப்பில், செயற்கை ரப்பரின் பங்களிப்பு, 70 சதவீதம் என்ற அளவில் உள்ளது. சர்வதேச பொருளாதார சுணக்க நிலையால், டிரக் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், டிரக் டயர்களுக்கான தேவை குறைந்துள்ளது.சென்ற ஏப்ரல் மாதம், ஒரு கிலோ செயற்கை ரப்பர் விலை, சராசரியாக, 245 ரூபாய் என்ற அளவில் இருந்தது. இது, சென்ற நவம்பர் மாதத்தில், 175 ரூபாயாக மிகவும் சரிவடைந்துள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

18.12.2012 P.M

19.12.2012 A.M

## 20 ஏக்கர் பயிர் நாசம் யானைகள் அட்டகாசம்



தேன்கனிக்கோட்டை: கிருஷ்ணகிரி மாவட்டம் தளி அருகே ஜவளகிரி அடுத்துள்ளது ஒசதொட்டி. இக்கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்களது விளைநிலங்களில் ராகி பயிர் செய்துள்ளனர். தற்போது, அறுவடை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு ஜவளகிரி வனப்பகுதி கவுண்டன் ஏரி காட்டுப்பகுதியிலிருந்து வந்த 10க்கும் மேற்பட்ட யானைகள் ஒசதொட்டி கிராமத்தை ஒட்டியுள்ள விவசாய நிலங்களுக்குள் புகுந்தன. புட்டப்பா, வரதராஜ், பாலகொண்டா, முனிவெங்கடப்பா, மல்லேஷ் உள்ளிட்டோரின் வயல்களில் அறுவடைக்கு தயாராக இருந்த ராகி, சோளம், துவரை, அவரை என சுமார் 20 ஏக்கரில் பயிர்களை தின்றும், காலால் மிதித்தும் நாசம் செய்துள்ளன. பின்னர், அதிகாலை நேரத்தில் யானைகள் இடம்பெயர்ந்து சென்றன. இதுகுறித்து விவசாயி கள் கூறியதாவது: வருடம் முழுவதும் உழைத்து கஷ்டபட்டு ஆளாக்கிய பயிர்களை யானை கூட்டம் அழித்து சேதப்படுத்தியுள்ளன. இதற்கு உரிய நிவாரணம் வழங்கிட வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

18th dec 2012 P.M

## உழவர் வயல்வெளி பள்ளி செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி

புதுச்சேரி, : தவளகுப்பம் உழவர் உதவியகத்தின் சார்பில் அபிஷேகப்பாக்கத்தில் செம்மை நெல் சாகுபடிக்கான உழவர் வயல்வெளி பள்ளி பயிற்சி முகாம் நடந்தது. தவளகுப்பம் வேளாண் அலுவலர் சத்தியன் துவக்கி வைத்தார். செம்மை நெல் சாகுபடிக்கு தேவையான உயிர் உரங்கள் நுண்ணுயிர் ஊக்கிகள் மற்றும் உயிரக பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி கிரின் வேர்டு பயோ புராடக்ட்ஸ் நிறுவனர் காசிநாதன் விவசாயிகளிடம் கலந்துரையாடினார். நிலத்தை இயற்கை உரங்களால் பயன்படுத்தினால் மண்ணில் இருக்கின்ற இயற்கையான நுண்ணுயிர்களை ஊக்குவித்து மண்வளத்தை பலப்படுத்துகிறது என விளக்கினார். முகாமில் அபிஷேகப்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள கிராம விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை தவளகுப்பம் உழவர் உதவியக களப்பணியாளர்கள் பழனிவேலு, அறிவழகள் ஆகியோர் செய்திருந்தனர்.

## மழை இல்லாததால் குளங்கள் வறண்டன தண்ணீரின்றி கருகும் பயிர்கள் களக்காடு பகுதி விவசாயிகள் கவலை

களக்காடு,: களக்காடு அருகே குளத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

களக்காடு அருகேயுள்ள வடகரையில் பம்பன்குளம், பூலாங்குளம் உள்ளது. களக்காடு யூனியனுக்கு சொந்தமான இந்த குளங்களின் மூலம் 300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறு கிறது. இரு குளங்களுக்கும் தலையணையில் இருந்து நேரடி கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடப் பட்டு வந்தது.

இந்நிலையில் பச்சை யாறு அணை கட்டப்பட்ட போது குளங்களுக்கு தண்ணீர் வரும் கால்வாய் அணையின் உள்பகுதிக்குள் சென்று விட்டதால் தண் ணீர் வருவது தடைபட்டது. எனவே பச்சையாறு அணையின் மூலம்தான் குளங்களுக்கு தண்ணீர் திறந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது களக்காடு பகுதியில் போதிய மழை பெய்யாததால் குளங்கள் வறண்டு கிடக்கின்றன. பம்பன்குளம், பூலாங்குளம் தண்ணீர் இன்றி வறண்டு காட்சி அளிக்கிறது. தண்ணீர் இன்றி குளங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாறி வருகிறது. எனினும் விவசாயிகள் மழையை நம்பி நிலங்களில் வாழை, நெல் பயிரிட்டுள்ளனர். குளங்களில் தண்ணீர் இல்லாததால் வாழை மற்றும் நெல் பயிர்கள் கருகும் நிலை எழுந்துள்ளது.

இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். பயிர்கள் கருகுவதை தடுக்க உடனடியாக பச்சை யாறு அணையில் இருந்து இரு குளங்களுக்கும் தண் ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

பச்சையாறு அணையை

திறக்காவிட்டால் போராட்டம்

இதுகுறித்து வடகரை விவசாய சங்க தலைவர் பாலன் கூறுகையில், ‘பச்சையாறு அணையில் 20 அடிக்கு தண்ணீர் உள்ளது. தண்ணீர் திறக்க வலியுறுத்தி கலெக்டரிடம் மனு அளித்துள்ளோம். ஆனால் இதுவரை குளங்களுக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனை வலியுறுத்தி போராட்டங்கள் நடத்த முடிவு செய்துள்ளோம்‘ என்றார்.